# MODUL SOALAN TOPIKAL CEMERLANG AMANJAYA SPM 2018

BAHASA TAMIL

**தமிழ் மொழி எஸ்.பி.எம்.**

6354

**SET 1**

**விடிவெள்ளி 1**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**.பிரிவு அ : வழிகாட்டிக் கட்டுரை**

[ *பரிந்துரைக்கப்படும் நேரம் : 30 நிமிடம்* ]

உமது பள்ளியில் இயங்கிவரும் தமிழ்மொழிக் கழகம், கடந்த வாரம் பள்ளி அளவில் பொங்கல் விழா ஒன்றனை வெற்றிகரமாக நடத்தியது. அக்கழகத்தின் செயலாளர் என்ற முறையில் அவ்விழாவைக் குறித்து ஒரு **நிகழ்ச்சியறிக்கையை** எழுதுக.

கீழே கொடுக்கப்பட்டுள்ள **குறிப்புகளை விவரித்து** உமது **நிகழ்ச்சி அறிக்கையைத்** தயார் செய்க.

- நாள் - நேரம் - இடம்
- நோக்கம்
- கலந்து கொண்டவர்களின் விவரம் மற்றும் எண்ணிக்கை
- உரைகள் – தலைமையுரை, சிறப்புரை
- மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்/ நிகழ்ச்சிகள் – 3 நடவடிக்கை
- பரிசளிப்பு

**அறிக்கை தயாரிக்கும்போது கவனத்திற் கொள்ள வேண்டியவை:**

- அறிக்கை வடிவில் இருத்தல்
- கழகப் பெயர் மற்றும் தலைப்பும் எழுதப்பட்டிருத்தல்
- நிகழ்வுகளைத் துணைத் தலைப்புகளில் எழுதியிருத்தல்
- துணைத் தலைப்புகளுக்கு எண் குறிக்கப்பட்டிருத்தல்
- அறிக்கை தயாரித்தவர் எனும் குறிப்பு முடிவில் இருத்தல்
- திகதி – வலப்புறம் எழுதப்பட்டிருத்தல்
- கையொப்பம், முழுப் பெயர் இருத்தல்
- பதவி, கழகம் குறிக்கப்பட்டிருத்தல்

[ 30 புள்ளிகள் ]

**விடிவெள்ளி 1**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

**பிரிவு ஆ : திறந்தமுடிவுக் கட்டுரை**

[ பரிந்துரைக்கப்படும் நேரம் : 1 மணி 15 நிமிடம் ]

கொடுக்கப்பட்டுள்ள தலைப்பில் **300 சொற்களில்** ஓர் எழுத்துப்படிவத்தை எழுதுக.

**1 ஒற்றுமை**

இத்தலைப்பில் **கருத்து விளக்கக்** கட்டுரை எழுதுக.

**[ 70 புள்ளி ]**

**விடிவெள்ளி 1**

**நனிசிறந்த மாணவர் / Pelajar CEMERLANG**

கீழ்க்காணும் **கருத்துப்படத்தைக்** கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.




**1** இப்படம் உணர்த்தும் **கருத்து** யாது?

__________________________________________________

__________________________________________________

[2 புள்ளி]

**2** கீழ்க்காணும் பனுவல் உணர்த்தும் **முக்கியச் செய்தி** யாது?

- சிறைச்சாலை வாழ்க்கையைப் புத்தகச்சாலையாக மாற்றியமைத்த மாமனிதர் **நெல்சன் மண்டேலா.**
- தூக்குக் கயிரை முத்தமிட்டபோதும் வாசிப்பை நிறுத்தாத **மாவீரன் பகத்சிங்.**
- பெண் கல்வி, வாசிப்புச் சுதந்திரத்திற்காகத் துப்பாக்கிச் சூடுபட்டவர் **மலாலா.**
- ஒரு நூலகத்தின் அனைத்து நூல்களையும் வாசித்ததோடு, எந்த நூல் எங்கே இருக்கும் என்பதைச் சொல்ல முடிந்த ஒரே ஆள் எனப் பெயரெடுத்த உலக அதிசயம் **கார்ல் மார்க்ஸ்**.
- பயணத்திற்கு ஒரு மோட்டார் சைக்கிள், உணவு பகிர மக்கள், அறிவு பகிர நூல்கள் எனத் தாமே ஒரு புரட்சிக் காவியமாய் வாழ்ந்து வரலாற்றின் வெற்றி அடையாளமானவர் **செகுவாரா.**

______________________________________________________________

______________________________________________________________

[2 புள்ளி]

**3** கீழ்க்காணும் உரைவீச்சு உணர்த்தும் **படிப்பினை** யாது?




____________________________________________

____________________________________________

[2 புள்ளி]

**4** கீழ்க்காணும் நகைச்சுவைத் துணுக்கில் **இராமுவின் கூற்று** எதை உணர்த்துகிறது?

சேகர் : ஏண்டா சோகமாகவே இருக்க?

இராமு : எனக்கு வீணை வாசிக்கனும்னு ஆசையா இருக்குடா.

சேகர் : நல்ல விசயம்தானே கத்துக்கிட்டா போச்சு.

இராமு : அது எப்படிடா முடியும்? எனக்குதான் படிக்கத் தெரியாதே!

____________________________________________

____________________________________________

[2 புள்ளி]

**5** கீழ்க்காணும் பகுதி வாயிலாக உமக்கு ஏற்படும் **விழிப்புணர்வு** யாது?

இந்தியர்களின் சொத்துக்கள் சுமார் 25% அதாவது 1150 கோடி வெள்ளி கேட்பாரற்று முடங்கிக் கிடக்கிறது. இதற்குக்காரணம் உயில் எழுதாமல் போனதுதான். மேலும், இறந்த பின் பிள்ளைகள் பார்த்துக் கொள்வர் என அலட்சியமாக இருந்து விடுவதோடு பிள்ளைகளிடையே ஒற்றுமை இல்லாமையும் உயில் பிரிப்பதில் இழுபறி நிலையை ஏற்படுத்தும். எனவே, ஒருவர் தனக்குப் பிறகு சந்ததிகளுக்கும் பிரச்சனை வராமல் தடுக்க உயில் எழுதலாம். உயில் எழுத 18 வயதிற்கு மேற்பட்டவராக நல்ல மன நிலையில் இரு சாட்சிகள் முன் கையெழுத்திட வேண்டும். எழுதியவர் எத்தனை முறை வேண்டுமானாலும் திருத்தம் செய்யலாம். எழுதுகின்ற உயில் எழுதியவரின் மறைவுக்குப் பின்தான் அமலுக்கு வரும். சிலருக்குச் சொத்துக்கள் போலவே அவர்களது கடன்களும் வாரிசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படும்.

__________________________________________________

__________________________________________________

[2 புள்ளி]

**6** கீழ்க்காணும் பகுதியை வாசித்து, சா.ஆ. அன்பானந்தன் அவர்களின் **இரண்டு சாதனையை** எழுதுக.



“எழுத்தாளர், வானொலி, தொலைக்காட்சி , மேடை நடிகர்களில் ஒருவர். நகைச்சுவையோடு ஆழமான கருத்துகளை மக்கள் மனத்துள் பதியவைக்கும் சிறந்த பேச்சாளர் சா. ஆ. அன்பானந்தன்." அனைத்துத் தமிழ் இளைஞர் மணிமன்றங்களும் இணைந்து பினாங்கில் 1964-இல் பேரவை கண்டபோது அதன் முதல் தேசியத் தலைவரானார். அனைத்து மணிமன்றங்களையும் ஒன்றிணைத்து ஒரு தேசியப் பேரியக்கமாக மாற்றிய சிறப்பு இவரையே சேரும். இவர் எல்லாத் துறைகளிலும் ஒளிவீசி ஒரு பல்கலைச் செல்வராய் விளங்கினார். சமுதாயம் அளித்த சமுகக்கலைமாமணி விருதோடு, பிபிஎன். ஏஎம்என். அரசவிருதுகளையும் பெற்று மதிப்பிற்குரிய இளைஞர் தலைவராய் வாழ்ந்து மறைந்தார்.

__________________________________________________

__________________________________________________

[2 புள்ளி]

## விடிவெள்ளி 1

**பரிந்துரைக்கப்படும் விடைகள்**

1 - பகடி வதையை **நிறுத்துவோம்**/ **தடுப்போம்**.
- பிற ஏற்புடைய விடைகள்

2 - வாசிக்கும் பழக்கத்தால் வாழ்வில் உயரலாம்.
- வாசிக்கும் பழக்கத்தை அனைவரும் வழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும்.
- வாசிப்புத் தொடர்பான பிற ஏற்புடைய விடைகள்

3 - பிள்ளைகள் பெற்றோரின் தியாகத்தை உணர்ந்து இறுதிக் காலத்தில் போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

- இன்றைய பிள்ளைகள் போற்றிப் பாதுகாக்க வேண்டிய பெற்றோர்களை அனாதைகளாக முதியோர் இல்லத்தில் விடுகின்றனர்.

4 இராமு வாசிக்க என்பதன் பொருளை அறிந்திருக்கவில்லை.

5 - உயில் எழுதுவதன் வழி நமது சொத்துக்கள் பாதுகாக்கப்படும்.

- இந்தியர்கள் ஒவ்வொருவரும் உயில் எழுதி முறையாகப் பதிவு செய்ய வேண்டியது அவசியமாகும்.

6 - இவர் தமிழ் இளைஞர் மணிமன்றத்தின் முதல் தேசியத் தலைவர்.

- இவர் அனைத்துத் தமிழ் இளைஞர் மணிமன்றங்களையும் இணைத்துத் தேசியப் பேரியக்கமாக மாற்றியவர்.